மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் காஞ்சிபுரம் மேற்பார்வை ஆய்வாளரிடம் இருந்து இன்னும் புலன் விசாரணையினுடைய ரிப்போர்ட் வந்து சேரவில்லை. ஆனால் அந்தத் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு அதிகத் தொகை கிடைப்பது பற்றி அந்தத் தொழிற்சங்கத் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேனேஜ்மெண்டுடன் பேச்சு வார்த்தை நடத்தி எவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். அத்தோடு அரசு தரப்பிலேயும் அவர்கள் என்ன உதவியை எதிர்பார்க்கிறார்களோ அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை ஓட்டேரிக் கால்வாய் தூர் எடுப்புப் பணி.

*வினா எண். 796—திரு. சு. பாலன் : மாண்புமிகு வேளாண்மைத் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பி அண்டு சி மில் மத்தியில் ஓடும் ஓட்டேரி கால்வாய் மண் நிரம்பிவிட்டதால் சாதாரண மழை பெய்தாலும் சுற்றிலும் உள்ள பகுதிகளிலும் மழை நீர் தேங்கி வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க அதில் தூர் வாரி இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

ஆம். ஓட்டேரி நல்லாவை அதன் தலைவாயிலிலிருந்து கடைசி வரை சீரமைக்க ரூ. 12·30 இலட்ச ரூபாய் மதிப்பீடு கொண்ட திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வேலை நடைபெற்று வருகிறது.

மாரங்கியரில் தென்பெண்ணை நதிக்கு தடுப்புச் சுவர்

* வினா எண். 797—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா மாரங்கியர் கிராமத்தில் தென்பெண்ணை நதிக்கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் உத்தேசம் உண்டா ?